மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம்,
வத்திராயிருப்பு

**அசல் வழக்கு எண். 30/2024**

வா.சா. 1 பாண்டியம்மாள், W/o வைரமுத்து

நாள்: 15.06.2026

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்.

**பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:**

1) நான் இந்த வழக்கில் 2வது வாதி என்று சொன்னால் சரிதான். 1வது வாதி என்னுடைய கணவர் என்று சொன்னால் சரிதான். என்னுடைய கணவர் இந்திய ராணுவத்தில் பணிபுரிந்து ஓய்வு பெற்று விட்டார் என்று சொன்னால் சரிதான். நானும் என்னுடைய கணவரும் மதுரையில் வசித்து வருகிறோம் என்று சொன்னால் சரிதான். 1 மற்றும் 2 பிரதிவாதிகள் உடன் பிறந்தவர்கள் என்று சொன்னால் சரிதான். பிரதிவாதிகள் என்னுடைய சித்தி பிள்ளைகள் என்று சொன்னால் சரிதான். வழக்கு சொத்துக்கள் ஆதியில் வீரையன் செட்டியார் என்பவருக்கு பாத்தியப்பட்டிருந்தது என்று சொன்னால் சரிதான்.வழக்கு சொத்துத்துக்கான பழைய சர்வே எண் 235/2A1 என்றும் புதிய சர்வே எண் 235/2A1A என்றும் தற்போதைய சர்வே எண்கள் 235/5, 6 மற்றும் 7 என உட்பிரிவு செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல.

2) வழக்கு சொத்தின் மொத்த விஸ்தீரணம் கிழ மேல் 21 அடி மற்றும் தென்வடல் 102 அடி ஆக மொத்தம் 2142 சதுர அடி என்று சொன்னால் சரிதான். 02.01.1994 அன்று வீரையன் செட்டியார் எவ்வித ஆவணமும் எழுதி வைக்காமல் காலம் சென்று விட்டார் என்று

சொன்னால் சரிதான். வீரையன் செட்டியார் அவர்களின் மனைவி பெயர் மாரியம்மாள் என்று சொன்னால் சரிதான். வீரையன் செட்டியார் அவர்களின் வாரிசுகள் தான் சூரியமூர்த்தி, விஜய ராணி மற்றும் பாலாமணி ஆகியோர்கள் என்று சொன்னால் சரிதான். சூரியமூர்த்தி மற்றும் விஜயராணி ஆகியோர்கள் இந்த வழக்கின் பிரதிவாதிகள் என்று சொன்னால் சரிதான். வீரையன் செட்டியார் காலம் சென்ற பின்பு அவருடைய வாரிசுகள் தான் அவருக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களை கூட்டாக அனுபவம் செய்து வந்தார்கள் என்று சொன்னால் சரிதான்.

3) 22.02.2016 அன்று வீரையன் செட்டியார் அவர்களுக்கு பாத்தியப்பட்ட சொத்துக்கள் குறித்து அவருடைய வாரிசுகள் பாகப்பிரிவினை செய்தார்கள் என்று சொன்னால் சரிதான். மேற்படி பாகப்பிரிவினை ஆவணத்தை ஆவணமாக நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரிதான். மேற்படி பாகப்பிரிவினையில் 2 வது பிரதிவாதிக்கு பாகப்பிரிவினை ஆவணத்தில் 2 வது தபசிலாக காட்டப்பட்டுள்ள சொத்தில் மையத்தில் சொத்து ஒதுக்கப்பட்டது என்று சொன்னால் சரிதான். மொத்த சொத்தில் மையத்தில் கிழ மேல் 21 அடி மற்றும் தென் வடல் 39 அடி உள்ள சொத்து 2 வது பிரதிவாதிக்கு ஒதுக்கப்பட்டது என்று சொன்னால் சரிதான். 1 வது பிரதிவாதிக்கு பாகப்பிரிவினை ஆவணத்தில் 3 வது தபசிலாகக் காட்டப்பட்டுள்ள சொத்து ஒதுக்கப்பட்டது என்று சொன்னால் சரிதான். பாகப்பிரிவினை ஆவணத்தில் 4 வது தபசில் சொத்து பாலாமணி என்பவருக்கு ஒதுக்கப்பட்டது என்று சொன்னால் சரிதான்.

4) பாகப்பிரிவினை ஆவணத்தில் விஜயராணி என்பவருக்கு ஒதுக்கப்பட்ட சொத்துக்கு வடக்கே 1 வது பிரதிவாதிக்கு பாகப்பிரிவினையில்

ஒதுக்கப்பட்ட சொத்து உள்ளது என்று சொன்னால் சரிதான். விஜயராணி என்பவருக்கு ஒதுக்கப்பட்ட சொத்தை நான் கிரையம் வாங்கியுள்ளேன் என்று சொன்னால் சரிதான். பாகப்பிரிவினை ஆவணத்தில் எனக்கு கிரையம் கொடுத்த விஜயராணி என்பவரின் பாகச்சொத்துக்கு தெற்கு மாலாக 1வது பிரதிவாதிக்கு ஒதுக்கப்பட்ட சொத்து என்று காண்பிக்கப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். நான் கிரையம் வாங்கிய சொத்துக்கு வடக்கே மற்றும் தெற்கே சூரியமூர்த்தி என்பவருக்கு பாத்தியப்பட்ட சொத்துக்கள் உள்ளது என்று சொன்னால் சரிதான். மேற்படி சூர்யா மூர்த்தி என்பவருக்கு பாத்தியப்பட்ட சொத்துக்கு கிழமேல் 21 அடி என்று சொன்னால் சரிதான்.

5) நான் தாக்கல் செய்துள்ள வழக்கில் கிழமேல் 4 அடி தென்வடல் 32 அடி அளவில் பாதை அமைந்துள்ளது என்பதை காண்பிக்க ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. வழக்குரையில் 2வது சொத்து எனக்கு பாத்தியப்பட்ட சொத்தை என்று சொன்னால் சரிதான். வீரய்யா செட்டியார் எல்லோருக்கும் பாத்திக்கப்பட்ட சொத்துக்களை ஆறு சொத்துக்களாக பிரித்து வழக்குரையில் காண்பித்துள்ளேன் என்று சொன்னால் சரிதான். ஆனால் எவ்வாறு ஆறு சொத்துகளாக பிரித்தேன் என்பதை காண்பிக்க ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. 2வது தபசில் சொத்தில் 1வது பிரதிவாதி ஆக்கிரமிப்பு செய்ததாக சொல்லியிருப்பது தவறு என்று சொன்னால் சரியல்ல. 1வது பிரதிவாதிகள் ஆக்கிரமிப்பு செய்ததாக கூறும் பகுதி 6வது வழக்குச் சொத்தாக காண்பிக்கப்பட்டிருப்பது தவறு என்று சொன்னால் சரியல்ல.

6) வழக்கு சொத்துக்களை பார்வையிடுவதற்காக நீதிமன்றத்தில் மனு செய்து நீதிமன்ற ஆணையர் வழக்குசொத்தினை பார்வையிட்டுள்ளார் என்று சொன்னால் சரிதான். ஆணையர் நீதிமன்றத்தில் அறிக்கை தாக்கல் செய்யும் பொழுது 6 வது வழக்கு சொத்தில் எவ்வித ஆக்கிரமிப்புகளும் செய்யப்படவில்லை என்று சொல்லியுள்ளார் என்று சொன்னால் ஆணையர் அறிக்கை தவறானது அவர் முறையாக அளவீடு செய்யவில்லை. 1 வது பிரதிவாதி எனக்கு பாத்தியப்பட்ட சொத்தில் எவ்வித ஆக்கிரமிப்புகளும் செய்யவில்லை என்றும் ஆக்கிரமிப்பு செய்துள்ளதாக கூறுவது பொய் என்று சொன்னால் சரியல்ல. 1 வது பிரதிவாதி 2 வது தபசில் சொத்தினை கிரையம் வாங்குமாறு என்னிடம் கூறினார்கள் என்று சொல்வது பொய் என்று சொன்னால் சரியல்ல. வழக்குரையில் 3 வது தபசில் சொத்தானது 1 வது பிரதிவாதிக்கு பாத்தியப்பட்டது என்று சொன்னால் சரிதான்.

7) 3 வது தபசில் சொத்தில் எனக்கு எவ்வித அத்தியாவசிய உரிமையும் இல்லை என்று சொன்னால் சரிதான். 1 வது வழக்குரை சொத்து வழியாக எனக்கு பாத்தியப்பட்ட 2 வது வழக்குரை சொத்துக்கு செல்வதற்கு எவ்வித பாதை பாத்தியமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. 2 வது வழக்குரை சொத்துக்கு 3 வது தபசில் சொத்து வழியாக கிழமேல் 4 அடி பாதை இருப்பதாக 1 வது பிரதிவாதி எந்த காலகட்டத்திலும் என்னிடம் சொல்லவில்லை என்று சொன்னால் சரியல்ல. நீதிமன்ற ஆணையர் அறிக்கை தாக்கல் செய்யும் போது 3 வது வழக்குரைச் சொத்தில் 1 வது பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட காரை வீடு கட்டுமானம் போக மீதி 2 ¼ அடி காலி மனை மட்டும் இருப்பதாக கூறித் தான் அறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்று சொன்னால் சரிதான். 1992 வது வருடத்திலேயே 1 வது பிரதிவாதி 3 வது வழக்குரைச் சொத்தில் காரைக்கட்டுமானம் கட்டி விட்டார்

என்றும் அப்போதிலிருந்து 2 ¼ அடி காலி மனை மட்டும் தான் இருந்து வருகிறது என்று சொன்னால் சரியல்ல.

8) 4வது வழக்குரைச் சொத்தில் 1வது பிரதிவாதி ஆக்கிரமிப்பு செய்து கட்டுமானம் கட்டியுள்ளார் என்று கூறுவது பொய் என்று சொன்னால் சரியல்ல. ஆணையர் அறிக்கையில் 4வது வழக்குரை சொத்தில் புதிதாக கட்டுமானம் எதுவும் கட்டவில்லை என்று அறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்று சொன்னால் சரியல்ல. வழக்குரையில் 3 முதல் 5 சொத்துகளாக காண்பிக்கப்பட்டுள்ள சொத்துக்கள் 1வது பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட சொத்துக்கள் என்று சொன்னால் சரியல்ல. 1வது பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட சொத்தினை அபகரிக்க வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் இந்த வழக்கினை நான் தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. விஜயராணிக்கு பாகப்பிரிவினை ஆவணம் மூலம் சொத்து ஒதுக்கப்படும் பொழுது தெற்கு பக்கம் சூரியமூர்த்தி என்பவருக்கு பாத்தியப்பட்ட சொத்து இருப்பதாக காண்பிக்கப்பட்டுள்ளது என்றும் 1வது பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட சொத்தினை அபகரிக்க வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் பாதை இருப்பதாக காண்பித்து கிரையம் பெற்றுள்ளேன் என்று சொன்னால் சரியல்ல.

9) 1வது பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட சொத்தில் பாதை அனுபவம் செய்ததாக சொல்லுவது தவறு என்று சொன்னால் சரியல்ல. நீதிமன்ற ஆணையர் தாக்கல் செய்துள்ள அறிக்கையில் 2வது சொத்துக்கான சர்வே எண். 235/6 என்றும் அதில் கட்டுமானம் உள்ளது என்றும் சொல்லியுள்ளார் என்று சொன்னால் சரியல்ல. எங்கள் வீட்டின் அளவு கிழமேலாக தென்பக்கம் 4 அடி, வடபக்கம் 4.2 அடியும், தென்வடல் 18–¼ அடியில் வீடு உள்ளது என்று சொன்னால் தென்வடல் அளவு சரியாக

குறிப்பிடப்பட்டுள்ளது ஆனால் கிழமேல் தென்பக்கம் மற்றும் வடபக்க அளவுகள் தவறாக குறிப்பிடப்பட்டுள்ளது. மேலே சொன்ன அளவுகளில் தான் வீடு உள்ளது என்றும் மற்ற இடம் காலியிடமாக உள்ளது என்றும் சொன்னால் சரிதான். நான் மதுரையில் குடியிருந்து வந்த காரணத்தினால் வழக்குரை வீட்டில் யாரும் குடியிருக்கவில்லை என்று சொன்னால் குடியிருந்தார்கள் பிரச்சனை ஏற்பட்டதால் குடியிருக்கவில்லை. பிராது வரைபடத்தில் DGEF பகுதி 1ம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட காலிமனை மற்றும் அதன் சர்வே எண். 235/5 என்றால் சொன்னால் சரிதான். மேற்படி காலி மனைக்கு செல்ல முடியாதவாறு நான் முள்வேலி அமைத்து தடுத்து விட்டேன் என்று சொன்னால் சரியல்ல.

10) என்னுடைய சொத்துக்கு வடக்கு பக்கம் உள்ள 1வது பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட சொத்துக்கு செல்ல வேண்டுமானால் என்னுடைய சொத்து வழியாகத்தான் செல்ல வேண்டும் என்று சொன்னால் சரிதான் ஆனால் பாதை எதுவும் விடப்படவில்லை. 1வது பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட சொத்துக்கு செல்ல வேறு பாதைகள் கிடையாது என்று சொன்னால் சரிதான். நான் சொல்வது போல என்னுடைய சொத்துக்கு தெற்கு பக்கம் அமைந்துள்ள 1வது பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட சொத்தில் எனக்கு நடைபாதை உரிமை கொடுக்கப்பட்டிருந்தால் அந்த உரிமையானது என்னுடைய சொத்து வழியாக என்னுடைய சொத்துக்கு வடக்கு பக்கம் அமைந்துள்ள 1வது பிரதிவாதியின் சொத்துக்குச் செல்ல வழிவகை இருந்திருக்கும் என்று சொன்னால் சரிதான். என்னுடைய சொத்தில் 1வது பிரதிவாதி சொத்துக்கு செல்வதற்காக பாதை ஒதுக்கி கொடுத்துள்ளேனா என்றால் ஒதுக்கி கொடுத்துள்ளேன். மேற்படி என்னுடைய சொத்தில் பிரதிவாதிக்கு பாதை ஒதுக்கி கொடுக்கப்பட்டதாக சொல்லப்படும் சங்கதிகள்

குறித்து நான் தாக்கல் செய்துள்ள வழக்குரையில் எதுவும் சொல்லவில்லை என்று சொன்னால் சரிதான்.

11) நான் சொல்வது போல 1வது பிரதிவாதிக்கு பாதை என்னுடைய சொத்து வழியாக ஒதுக்கி கொடுத்து இருந்தால் அது குறித்து அன்றைய தினமே ஆவணம் எழுதியிருப்போம் என்று சொன்னால் சரியல்ல. 1வது பிரதிவாதியின் வீட்டுக்கு மேற்கு பக்கம் 2 அடி காலி மனை உள்ளது என்று சொன்னால் சரியல்ல. 1 ½ அடி காலி மனை தான் உள்ளது. அதற்கு மேற்கு பக்கம் ராமர் என்பவருக்கு பாத்தியப்பட்ட காலி மனை உள்ளது என்று சொன்னால் சரிதான். மேற்படி ராமர் மற்றும் 1வது பிரதிவாதியும் தலா 1 அடி இடம் விடப்பட்டு 2 அடி காலி மனை உள்ளது என்று சொன்னால் சரியல்ல. இருவரும் தலா 1 ½ இடம் விடப்பட்டு 3 அடி காலி மனை உள்ளது. மேற்படி காலி மனையைத்தான் நான் பாதையாக அனுபவம் செய்து வந்தேன் என்று சொன்னால் சரியல்ல. மேற்படி பாதையை அனுபவம் செய்ய 1வது பிரதிவாதி எந்த காலகட்டத்திலும் இடைஞ்சல் செய்யவில்லை என்று சொன்னால் சரிதான் ஆனால் கிழக்கு பக்கம் பாதையை அனுபவம் செய்வதில் இடைஞ்சல் செய்து வருகிறார்.

12) பாகப்பத்திரத்தில் 1வது பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட 1வது சொத்தின் மேற்குப் பக்க எல்லையாக தென் வடல் பொதுச்சந்து என்று தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். மேற்படி பாதையை அனுபவம் செய்து கொள்ளலாம் என்று எண்ணி தான் நான் சொத்தினை கிரையம் வாங்கினேன் என்று சொன்னால் சரியல்ல. 1வது பிரதிவாதியின் வீட்டுக்கு கிழக்கு பக்கம் எனக்கு எந்த நடைபாதை பாத்தியமும் கொடுக்கப்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. நான் வழக்கில் தாக்கல் செய்துள்ள மாதிரி வரைபடம் தவறானது என்று

சொன்னால் சரியல்ல. மாதிரி வரைபடத்தில் கண்டுள்ளவாறு பூமியில் அமைப்புகள் இல்லை என்று சொன்னால் சரியல்ல. வழக்கில் சொல்லப்பட்டுள்ள எல்லை மற்றும் அளவு விபரங்கள் தவறாக குறிப்பிடப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. நான் வழக்குரையில் காண்பிக்கப்பட்டுள்ள 3 முதல் 5 வரையிலான சொத்துக்கள் 1வது பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட சொத்துக்கள் என்று சொன்னால் சரியல்ல. மேற்கு பக்கம் பாதை இருப்பதால் வழக்கில் நான் கேட்டுள்ள பரிகாரம் எனக்கு கிடைக்க கூடியது அல்ல என்று சொன்னால் சரியல்ல. நான் வழக்கில் கேட்டுள்ள எந்த பரிகாரமும் எனக்கு கிடைக்கக்கூடியது அல்ல என்று சொன்னால் சரியல்ல.

13) 1வது பிரதிவாதி உடல்நலம் பாதிக்கப்பட்டவர் என்று சொன்னால் அவர் கொடுத்த இடைஞ்சலால் எனக்கும் உடல் நலம் பாதிக்கப்பட்டுள்ளது. அவருடைய உடல் நலக் குறைவை எனக்கு சாதகமாக பயன்படுத்திக் கொண் அவரிடம் அவருக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களை கிரையம் கேட்டதற்கு அவர் மறுத்துவிட்ட காரணத்தினால் மோசடியாக இந்த வழக்கினை தாக்கல் செய்தவர்கள் என்று சொன்னால் சரியல்ல. 1வது பிரதிவாதி திருப்பூரில் குடியிருந்து வருகிறார் என்று சொன்னால் சரிதான்.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல நான் சொல்ல தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு அவரால் ஒத்துக்கொண்டு கையெழுத்திட்டுள்ளார்.

ஒப்பம்.ராமநாதன்
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
வத்திராயிருப்பு